
இணையத்தில் ஒரு கல்வி புரட்சி
தரம் 1 தொடக்கம்
A/L வரையான எல்லா தரத்தினரும்
தமிழ் மொழி மூலம்
English Medium
அனைத்து பாடங்களையும்
இணையத்தில் கற்றுக்கொள்ளலாம் !
ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக.... தினமும் பார்க்க மறவாதீர்..!
https://lankaeducations.blogspot.com

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம். – கண்டி

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை -2020

தரம் :- 13 (2020) சித்திரக் கலை - I அலகுப் பரீட்சை மூன்று மணித்தியாலம்

வினாத்தாள் இல :- 01

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.

1 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

01. பின்வரும் எந்த சிறப்பியல்பு ஸ்டேன்லி அபேசிங்ஹவினது கலைப்படைப்புக்களின் சிறப்பியல்பாக அமைகிறது.
I. குறுகிய தடித்த இரேகைகளின் பயன்பாடு.
II. நீர்வர்ண பாவணையின் பூரணப்பாடு
III. தடித்த தூரிகைதடங்களும், வர்ண ஒத்திசைவும்
IV. தட்டையான வர்ணப் பாவனை, தடித்த வலைந்த இரேகைகள்
V. முறிக்கோடுகளுடனான மெல்லிய இரேகைகள்.

02. மட்பாண்டக் கூடம், தியானம் ஆகிய கலைப்பண்புகளுக்குச் சொந்தக்காரராகத் திகழ்பவர்.
I. A. மார்க் II. திஸ்ஸ ரணசிங்க III. ஸ்டேன்லி அபேசிங்க
VI. H. A. கருணாரத்ண V. டேவிட் பெயினடர்.

03. "முகத்தில் உணர்வுகளை வெளிக்காட்டுவதற்காக இருண்ட நிறங்களுடன் பாவ வெளிப்பாடுகள் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன." இந்தக் கூற்றுக்கான கலைப்படைப்பாக அமைவது.
I . ஆவணி ஊர்வலம் II. மட்பாண்டக் கூடம் III. தியானம்
IV. பாலகன் இளைஞன் V. மாரன் யுத்தம் (மாரபராஜய)

04. ஸ்டேன்லி அபேசிங்கவினது ஆக்கத்துக்குப் பொருத்தமான கூட்டமாக அமைவது.
I. மட்பாண்ட கூடம், ஓட்டுச்சூளை, ஊர்வலம்
II. பெயரிடப்படாத ஓவியம், குழந்தைப் பருவமும், இளமையும்.
III. ஊர்வலம், கடற்கன்னியின் நடனம், குழந்தைப் பருவமும் இளமையும்.
IV. ஊர்வலம், சகுந்தலை, சித்தார்தர் பிறப்பு
V. வாழ்க்கை அரவணைப்பு, மனிதனும் நாயும், கடற்கன்னியின் நடனம்.

05. பின்வரும் பெயர் தொகுதிகளில் 43ம் குழுவில் இடம்பெறும் கலைஞர்கள்.
I. ஹரீ பீரிஸ், ஸ்டேன்லி அபேசிங்க, L.D. P மஞ்சுஸ்ரீ, ஜோர்ஜ்கீட்
II. திஸ்ஸரணசிங்க, டேவிட்பெயின்டர், ,ஜவன் பீரீஸ், ரிச்சட்கெப்ரியல்.
III. திசாநாயக்க, ஜோர்ஜ்பிராக், பிக்காசோ, ஜஸ்டின் தெரணியகல
IV. L.D. P. மஞ்சுஸ்ரீ, ஜவன் பீரீஸ், ஹரீ பீரிஸ், ரிச்சட்கெப்ரியல்
V. ஜவன் பீரீஸ், ,ஜஸ்டின் தெரணியகல, ரிச்சட்கெப்ரியல். A. மார்க்கு

06. 43ம் குழுவின் தலைவராக திகழ்பவர்.
I. ஜஸ்டின் தெரணியகல II. ஆனந்த குமாரசுவாமி III. லயனல் வெல்ட்
IV. ஜோர்ஜ் கீட் V. டேவிட் பெயின்டர்.

07. பின்வரும் கலைஞர்களின் பெயரும் காலப்பகுதியும் பொருத்தமாக அமைவது.
I. ஜவன் பீரீஸ் (1921 - 1988), ஹரி பீரீஸ் (1904 - 1988)
II. ஜஸ்டின் தெரணியகல (1918 – 1976), டேவிட் பெயின்டர்.(1924-1995)
III. ஜோர்ஜ் கீட்(1903 – 1967), W.J .பீலிங் (1907- 1977)
IV. ஹரிபீரிஸ் (1902- 1986), ஸ்டேன்லி அபேசிங்க (1921 - 1988),
V. L.P.D. மஞ்சுஸ்ரீ (1902- 1980), A. மார்க் (1860-1880)

08. **L.D. P** மஞ்சுஸ்ரீ யின் கலைப்படைப்புத் தொகுதியாக அமைவது.

I. ஐஸ்கிறீம் வண்டி, மட்பாண்ட கூட்டம் **II.** யமனைத் தோட்கடித்தல்,பத்தினி ஆலயம்
III. பெண் உருவங்கள், பத்தினி ஆலயம் **IV.** பெண்உருவங்கள், ஞானம்ஞானமற்ற கன்னியர்கள்
V. திரும்பி வருதல், கல்கிசை **(Mount Lavinia)**

09. 43ம் குழுவின் கலைஞர்களில், சிலை, கார்டூன் நிழல்படம்,ஆகியவற்றில் திறமையைக் காட்டிய கலைஞர்கள்.

I. ஒப்ரி கொலட், றிச்சட் கெப்ரியல், லயனல் வெல்ட்
II. டேவிட் பெயின்டர், லயனல் வெல்ட், ஜஸ்டின் தெரணியகல
III. ஒப்ரி கொலட், றிச்சட் கெப்ரியல், **L.P.D.** மஞ்சுஸ்ரீ
IV. **L.P.D.** மஞ்சுஸ்ரீ, ஜஸ்டின் தெரணியகல, லயனல் வெல்ட்
V. லயனல் வெல்ட், றிச்சட் கெப்ரியல், ஜோர்ஜ் கீற்

10. இருள்,ஒளி நிலைமைகளை நிறங்கள், மூலம் காட்டி ஸ்டென்லி அபேசிங்க வரைந்த "ஊர்வலம்" எனும் ஓவியம் எந்த கலைவடிவப் பின்னனியைக் கொண்டது.

I. கனவடிவ வாதம் **II.** மனோரீதியான வாதம் **III.** அக்டமிக் வாதம்
IV. கீழேத் தேய வாதம் **V.** மனப்பதிவு வாதம்.

11. இலங்கையின் முதலாவது " சித்திரக் கதை" சித்தரிப்பு முறையினை படைத்த பெருமைக்குறியவர்.

I. மைக்கல் ஆஞ்சலோ **II.** றபாயல் சென்சியோ **III.** கயற்றே
IV. **G.S** பெனார்ந்து **V.** ஜோன் மார்ஸல்

12. நீர் வர்ண ஊடக நுட்ப முறையைக் கையாண்டு வெற்றிக் கண்டவர்களில் **G.S** பெனார்ந்து மிக முக்கியமானவர். இவரின் படைப்புகளில் வெளிப்படும் ஐரோப்பிய தழுவல் கலை எது?

I. தரைக் காட்சி அமைப்பின் தழுவல் **II.** மண்பாண்டகடை காட்சியின் தழுவல்
III. தச்சனின் வீடு ஏழ்மை அமைப்புத் தழுவல் **IV.** புத்தக அட்டை தயாரிக்கும் முறை
V. சித்தாத்தரின் பிறப்பு பௌத்த மத தழுவல்.

13. இலங்கையின் நவீன சித்திர அமைப்புகளில் மாற்றத்தை ஏற்படுத்திய 43ம் குழுவைச் சேர்ந்த கலைஞரான "ஜவன் பீரீஸ்" அவர்களின் ஓவியங்களில் காணப்படும் பிரதான இயல்புகள்.

I. சாந்தமான, கோபம், யுத்தப் பிடிகள் **II.** சமய உணர்வு, அபாயமான உணர்வு
III. மக்களின் வாழ்வியல் சூழல் **IV.** சாந்தம், ஏழ்மை, வறுமை உணர்வு
V. அமைதி, நிசப்தம்,சாந்தம்,கொண்டகுணஇயல்பு


14. "ஜஸ்டின் தெரணியகல" அவர்கள் இலங்கையின் ஓவியக் கலையில் ஏற்படுத்திய பிரதான மாற்றமாகக் கருதக்கூடியது.

I. கியூபிச வாதத்தினூடாக மாற்றத்தை ஏற்படுத்தியமை.
II. இலங்கையின் வெளிப்பாட்டு வாதத்தினூடாக மாற்றத்தை ஏற்படுத்தியமை.
III. அதீத உச்ச வெளிப்பாட்டு வாதத்தினூடாக மாற்றத்தை ஏற்படுத்தியமை.
IV. பிரஸ்கோ சாந்து சாயல் கொண்ட வாதத்த்தினூடாக ஏற்படுத்தியமை.
V. மனேபரீதியான வெளிப்பாட்டு வாதத்த்தினூடாக ஏற்படுத்தியமை.

15. நவீன வாதக் கலை இயல்பான பொருட்களை திரிபுபடுத்திக் காட்டும் இயல்பை கலைஞன் சுய விருப்பத்தின் படி உபயோகித்துள்ளதை காணக்கூடிய ஓவியம்.

I. தங்க மீனும், பெண்பிள்ளையும் **II.** வயல்
III. திரும்பி வருதல் **IV.** ஞானமுள்ள, ஞானமற்ற கன்னியர்
V. சாந்தம், ஏழ்மை, வறுமை உணர்வு

16. உருவில் காட்டப்படும் கலை நிர்மாணத்தின் சிறப்புத் தன்மையாக சித்தரிக்கப்படுவது.



I. யதார்த்த வாதம், அரூப வாதம் **(Abstract)**
II. இயற்கை வாதம், மீயதார்த்த வாதம்
III. அரூப வாதம் **(Abstract)** இயல் காட்சி வாதம்
IV. போவிஸம், மீயதார்த்த வாதம்.
V. இயல் காட்சி வாதம்,போவிஸம்.

17. இந்திராணி ஆக்கத்தின் கலைஞர் மற்றும் ஊடகம்.

I. ஹரி பீரிஸ் - எண்ணெய் வர்ணம் கன்வஸ் துணி
II. ஜோர்ஜ்கீற் - எண்ணெய் வர்ணம், கன்வஸ் துணி
III. ஜவன் பீரிஸ் - பிரஸ்கோ முறை
IV. A. மார்க் - நீர் வர்ணம் சுவர் ஒவியம்
V. ஹரி பீரிஸ் - நீர் வர்ணம் கன்வஸ்துணி

18. ஆழத்தைக் காட்டும் தூர நோக்கு இயல்புகள், முப்பரிமாண இயல்புகள் என்பது எக்கலைக் கோட்பாட்டின் இயல்புகளாகக் கொள்ளப்படுகிறது.

I. கழிவுப் பொருளின் மூலம் ஆக்கப்படும் கொலாஜ் ஆக்கக் கோட்பாடு
II. அதிஉயர் மீயதார்த்த வாதம்
III. அக்கடமிக் வாத அரூப வாதம் **(Abstract)**
IV. ஐரோப்பிய கலாநிலையச் சித்திரக் கலைக் கோட்பாடு
V. இயல் காட்சி வாதம், போவிஸம்.

19. இங்குக் காட்டப்படும் சித்திரத்தின் அதி உயர் சிறப்பாகக் காட்டப்படும் பண்பு



I. இயற்கையின மீதான செல்வாக்கின் உச்சம்
II. கிராமிய கலை நுட்பத்திறனின் வெளிப்பாடு
III. கனவடிவ வாதத்தின் அதி சிறப்பாகக் காட்டப்படுகின்றது.
IV. கலாசார ரீதியான வெளிப்பாட்டு இயல்
V. உணர்வு ரீதியான அழகியல் வெளிப்பாட்டு வாதம்.

20. கன்வஸ் மீது எண்ணெய் வர்ணத்தினால் வரையப்பட்ட "வாசிக்கும் பிள்ளை" எனும் கலைப்படைப்புக்குச் சொந்தக்காரர்.

I. வைத்தீஸ்வரன் சுப்பிரமணியம் II. மைக்கல ஆஞ்சலோ III. ஹென்றிமூர்
II. G.S பெனார்ந்து V. கே. கனகசபாபதி

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை -2020

தரம் :- 13 (2020) சித்திரக் கலை - II அலகுப் பரீட்சை மூன்று மணித்தியாலம்

(01) குறுவினாக்கள்

01. "தங்க மீனும் பெண் பிள்ளையும்" என்ற ஓவியத்தில் வெளிப்பாட்டு வாதம் தீவிரமடைந்து ள்ளமைக்கான காரணம் யாது?

02. "கல்கிஷ்சை" எனும் ஓவியத்தின் செல்வாக்காக "கனவடிவவாத ஓவியக் கலையை குறிப்பிடலாம் இவ்வோவியம் கொண்டுள்ள பிரிதொரு செல்வாக்கு யாது?

03. கன்வஸ் மீது எண்ணெய் வர்ணத்தினால் வரையப்பட்ட "திரும்பி வருதல்" ஓவியத்தை வரைந்தவர்.

04. இலங்கையின் குறித்துச் சொல்லத்தக்க ஓவியரான இவர் கல்வித் திணைக்களத்தின் கீழ் பாடசாலை களை பரிசோதிக்கும் பரிசோதகர் பதவியை வகித்த முதல் இலங்கையருமாவார் அக் கலைஞர் யார்?

05. இயமனைத் தோற்கடித்தல் என்ற ஓவியம் எங்கே வரையப்பட்டுள்ளது.

06. பாரம்பரிய ஓவியங்களைக் கற்றறியவும் பிரதியிடவும் பங்காற்றிய கலைஞர் யார்?

07. அக்கடமிக் யதார்த்தவாத பண்புகளில் இருந்து விலகி தற்கால வாதக் கலையுடன் இணைந்த கலைப்பண்புகளைக் கொண்டுள்ள ஓவியம் எது?

08. சூழலிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய பொருட்களைக் கொண்டு (பிளாஸ்டிக் போத்தல்கள். பிளாஸ்டிக் குழாய்கள்) போன்றவற்றைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட கலைப்படைப்பு எது?

09. அக்கடமிக் வாத கலையின் தந்தையென அழைக்கப்படும் மிகப் பழமையான இலங்கை ஓவியர் யார்?

10. 20ம் நூற்றாண்டில் இந்திய ஓவியக் கலையுடன் பணியாற்றிய முக்கியமான பெண் கலைஞர் யார்.?

02.

" இலங்கையர்கள் தமது கலைவிருத்தியின் பொருட்டு இந்திய, ஐரோப்பிய கலை நுட்பங்களைப் பெரிதும் உள்வாங்கி பல உன்னத படைப்புக்களை நிர்மாணிப்பதில் இலங்கைக் கலைஞர்களாக வெற்றிப் பெற்றனர்."

(அ). 43ம் குழுவைச் சேர்ந்த கலைஞர்களின் பெயர்களைத் தருக.

(ஆ). ஹரி பீரிஸின் ஓவியங்களில் காணப்படும் சிறப்பான பண்புளளை முன்வைக்குக.

(இ). இலங்கை ஓவியர்களில் "ஜஸ்டின் தெரணியகல" பொருட்களின் சுபாவங்களைத் திரிவுபடுத்தி வெளிப்படுத்தும் சிறப்பியல்புக் கொண்டவர் எனும் அடிப்படையில் இவரது ஓவியமான "தங்கமீனும் பெண்பிள்ளையும்" எனும் ஓவியத்தைக் கலை மதிப்பீடு செய்க.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம். – கண்டி

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை -2020

தரம் :- 13 (2020) சித்திரக் கலை - I அலகுப் பரீட்சை -02 ஒரு மணித்தியாலம்

வினாத்தாள் இல :- 02

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.

1 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

01. குழந்தைப் பருவமும் இளமையும் என்ற ஓவியத்தின் குறைப்பாடாகக் கருதக் கூடியது.
I. இடப்பரப்புக்குள் அடங்க வேண்டிய வடிவங்களின் திட்டவட்டமான தன்மையை புலப்படுத்தவில்லை.
II. மனப்பதிவு வாதத்தைப் பின்பற்ற வில்லை.
III. ஜேர்மன் வெளிப்பாட்டுவாத கலைப் பண்பை பின்பற்றவில்லை.
IV. பின் மனப்பதிவு வாதத்தை அதிகம் பின்பற்றியுள்ளது.
V. பின்னனி,முன்னனி கோட்பாட்டு விதிகளைப் பின்பற்ற வில்லை.

02. "பெயரிடப்படாத ஓவியம்"எனும் ஓவியத்தை வரைந்த கலைஞர்.
I. டேவிட் பெயினடர். II. திஸ்ஸ ரணசிங்க III. ஸ்டேன்லி அபேசிங்க
VI. H. A. கருணாரத்ண V. A. மார்க்

03. "பிரதிமைக் கலைமாணி" என அழைக்கப்படுபவர்.
I . R. சிவசுப்பிரமணியம் II. K. இராசரத்திணம் III. ரமணி
IV. M.S.A. அசீஸ் V. K.S. ஆனந்தன்

04. இலங்கையின் "சிற்பக் கலாநிதி" என்ற சிறப்பிற்குரிவர்.
I . ரமணி II. சேன்க்க சேனாநாயக்க III. சு. சிவப்பிரகாசம்
IV. ஹென்றி தர்மசேன V. மக மக சேகர

05. S.R கனகசபை என்ற ஓவியரின் ஓவியக் காலம்.
I. 1901 - 1948 II. 1901 - 1960 III. 1903 – 1920
IV. 1953 - 1948 V. 1906 – 1946

06. யாபப்பகுவ அரண்மனைத் தொகுதியின் காலப்பகுதி
I. கம்பளை – கி. பி 1364 II. கண்டி – கி. பி 1462 III. கம்பளை – கி. பி 1273
IV. கம்பளை – கி. பி 1308 V. கண்டி – கி. பி 1268

07. யாப்பகுவ அரண்மனை அமைக்க அணுசரனை வழங்கிய மன்னன்.
I. 4ம் புவனேகபாகு மன்னன் II. 2ம் புவனேகபாகு மன்னன்
III. 3ம் புவனேகபாகு மன்னன் IV. 1ம் புவனேகபாகு மன்னன் V. 3ம் விக்ரமபாகு மன்னன்

08. யாப்பகுவ கட்டிடக் கலை கட்டப்பட்டதன் நோக்கமாக அமைவது.
I. மன்னன் பாதுகாப்பு, ஆட்சிப்பலம், பாதுகாப்பு
II. குடியிருப்புகள், பாதுகாப்பு நடவடிக்கை, சமய நடவடிக்கை
III. பிரித் ஓதுதல், அழகுக்கான கட்டிட வெளிப்பாடு, குடியிருப்பு
IV. குடியிருப்பு,சமயநடவடிக்கை, மன்னனின் பொழுதுபோக்கு
V. அரண்மனை பாதுகாப்பு, சமயநடவடிக்கை,அழகு கட்டிட தேவை.

09. யாப்பகுவ தொகுதியில் காணப்படும் செதுக்கல் வேலைப்பாடுகள்.

I. படிவரிசை, யானைஉருவம், சிங்கம், யாப்பகுவ குதிரை
II. குதிரை, யாப்பகுவ சிங்கம், யானை
III. எருது,யானை, ரிசப குஞ்சரம், மகரம்
IV. கிம்பிகிமுகம், மகரம்,புன்கலசம்,படிவரிசை
V. படிவரிசை, புன்கலசம்,யாப்பகுவ சிங்கம்,கிம்பிகி முகம்.

10. பின்வரும் கூற்றுக்களில் யாப்பகுவ படிவரிகைக்கு மிகப் பொருத்தமான கூற்று.

I. கற்கலால் அமைக்கப்பட்ட கற்தொகுதி வரிசை உருவ அமைப்பு உள்ளமை.
II. மகர தோரண அமைப்பில் "கஜலக்ஷ்மி" உருவம் பொறிக்கப்பட்டுள்ளமை.
III. உன்னத கண்டி,கம்பளை கால மரபு பின்பற்றப்பட்டமை.
IV. படிவரிசையில் உள்ள படிகள் நெருக்கமாகவும் குன்றிலிருந்த சரிவாகவும் அமைக்கப்பட்டள்ளமை.
V. படிவரிசை, புன்கலசம்,யாப்பகுவ சிங்கம்,கிம்பிகி முகம்.

11. யாப்பகுவ கட்டிடக்கலை நுழைவாயில் மண்டபத்துக்கான செதுக்கல்களுக்கு மிகப் பொருத்தமான அம்சங்களை உள்ளடக்கிய தொகுதி.

I. கிம்பிஹிமுகத்துடனான மகரத் தோரணம் காணப்படுகின்றமை.
II. நடனமாடும் ,இசைக்கும் உருவங்களின் நளினத் தன்மை.
III. காற்றுத் துளைக்குப் பொருத்தமான அளவில் சிறிய துளைகள் துளைகள் இடப்பட்டுள்ளமை.
IV. தொடர்ச்சியான சிற்ப வேலைப்பாடுகள் காணப்படுகின்றமை.
V. பொருத்தமான இடைத்தளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமை.

12. யாப்பகுவ கட்டிட நிர்மாணிப்புகளில் கதவு நிலைகள், காற்றுத் துளைகள் அமைக்கப்பட்டதன் பிரதான சிறப்பம்சமாக கருதப்படுவது.

I. லக்ஷிமிக்கு யானைகள் இரு புறத்திலம் நீர் வார்த்தல்.
II. சற்று குனிந்து இருக்புமாறு சிங்க உருவம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை.
III. பெரியளவிலான காதணிகளும். கொண்டையும் இடப்பட்ட பெணட உருவங்கள்.
IV. திரிபங்க நிலையிலான உலுவம் காணப்படல்.
V. வட்டதாகேயின் மாதிரி அமைப்பு செதுக்கப்பட்டிருத்தல்.

13. "ஆகனகர" எனப் பெயர் பெறும் கட்டிட அமைப்பு.

I. அரச மரத்தை சுற்றி அமைக்கப்படும் கரை.
II. புத்தர் சிலையின் அமைப்புக்கு முதல் கட்டப்படும் அமைப்பு
III. போதிசத்துவர் புத்தநிலை ஆசனத்தை சுற்றி அமைக்கப்படும் கட்டிடத் தொகுதி
IV. விகாரைத் தொகுதியில் முதல் அத்திவாரக் கரை
V. பொதுவான பௌத்த கட்டிட கலைத் தொகுதி

14. இலங்கையில் மிகவும் பிரசித்திப் பெற்ற ஆசனாக் கரைகள்

I. குருணாகல் நில்லகம, பண்டு வஸ்நுவர ஆசனகர
II. மட்டக்களப்பு மாவட்ட புலுகுனாவ,அநுராத புர மாவட்ட கொல்லேவ ஹல்மில்லாவெட்டிய
III. பொலநறுவை புலுகுனாவ . தம்புள்ள, நில்லகம போதி திரும்பி வருதல்
IV. கண்டி மாவட்ட சக்மன் மலுவ, மட்டக்களப்பு மாவட்ட புலுகுனாவ
VI. குருணாகல் நில்லகம, மட்டக்களப்பு மாவட்ட புலுகுனாவ.

15. பிக்குமார் ஸ்நானம் செய்ய அமைக்கப்பட்ட கட்டிட அமைப்பு முறை

I. போதிகரை II. பதானகர III. உபோசத்தகர
IV. ஜந்தாகர V. லோவாமகாபாய

16. வரலாற்று கால மன்னர்களின் கட்டட நிர்மாணங்களில் "உபோசத்தகர" எனப்படுவது.

I. பிக்குகள் ஸ்நானம் செய்ய அமைக்கப்பட்ட இடம்.
II. பிக்குமார் தியானம் செய்யும் மண்டபம்.
III. போயாதின கருமங்கள் செய்யக் கூடும் மணடபம்
IV. அரசமரத்தை சுற்றியுள்ள மண்டபம்.
V. ஆசனத்தை சுற்றியுள்ள மண்டபம்

17. இலங்கையில் காணப்படும் மிகவும் சிறந்த "ஜந்தாகர" காணப்படும் இடங்கள்.

I. பஸ்சீமாராமய, பண்டுவஸ்நுவர, லாகுகல மஹாவிகாரை
II. கண்டி, ஹல்மில்லவெட்டிய, தம்பள்ள, பல்லேகல
III. அநுராதபுரம், பண்டுவஸ்நுவர, மிகிந்தலை
IV. அபயகிரிய,மஹாவிகாரை, மிகிந்தலை, அரங்கலே
V. ஹிந்தகல, மஹாவிகாரை,மிரிஸ்வெட்டிய

18. ஒன்பது அடுக்குகளை கொண்ட உலோக கூரை அமைப்புக் கொண்ட கட்டிட நிர்மாணம்.

I. ஜந்தாகர II. போதனாகர III. பேசாவலலு
IV. சக்மன்மலு V. பியன்கல்

19. விகாரைத் தொகுதிகளில் "சோபான பந்திய" எனும் கட்டிட நிர்மாண அமைப்பு பெயர் பெறுவது.

I. வாகல் கடம் II. வட்டதாகே III. கட்டக சைத்தியம்
IV. போதனை மண்டபம் V. படிவரிசை

20. பாரம்பரிய கட்டிடடத் தொகுதியில் "புன்கலச" த்தின் அடையாளம்.

I. சௌபாக்கியம், நிறைவு,அதிஷ்டம்
II. வாழ்வியல் அம்சம் பேசும் அடிப்படைகள்
III. உலக இன்பம், போதைனைகள் வேண்டுதல்
IV. மக்களின், மன்னனின் ஆட்சி சிறப்பு
V. உலக நீதி, நியதிகளுக்காக அமைக்கப்பட்டது.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை -2020

தரம் :- 13 (2020) சித்திரக் கலை - II அலகுப் பரீட்சை - 02

(01) குறுவினாக்கள்


01 தொடக்கம் 05 வரையான வினாக்களுக்கு கீழ்வரும் படங்களைப் பயன்படுத்துக.



(A)



(B)



(C)



(B)



(D)

01. பிக்குகள் நோயற்று ஆரோக்கியமாக வாழ கட்டப்பட்ட கட்டிடத் தொகுதி எப்பெயரால் அழைக்கப்படும்.
02. அரச மரத்தின் பாதுகாப்புக்காக கட்டப்பட்ட கட்டிட நிர்மாணத்தின் எழுத்து.
03. துட்டகைமுனு மன்னால் அமைக்கப்பட்ட அநுராதபுர கால கட்டிட தொகுதி காட்டும் நிர்மாணத்தின் பெயர்.
04. மேற் கூறப்பட்ட எழுத்துக்களுக்குப் பொருத்தமான கலை நிர்மாணங்களின் பெயர்களை எழுதுங்கள்.
05. தற்போது தரை மீள அமைத்த 1600 தூண்கள் கொண்ட கட்டிடத் தொகுதியைக் காட்டும் படத்தின் பெயர்.
06. யாப்பகுவ கட்டிடத் தொகுதியில் சிறந்த விலங்குரு எது?
07. யாப்பகுவ அத்தளத்தில் காணப்படும் செதுக்கல்கள் எவை?
08. யாப்பகுவ செதுக்கள்களின் கட்டிடக்கலை மரபு எது?
09. யாப்பகுவ கட்டிட நிர்மாணத் தொகுதியில் காணப்படும் மகரத் தோரணத்தில் காணப்படும் சிறப்புருவம் எது?
10. யாப்பகுவ பெண்ணுருவங்களின் (புன்கலசத்தில்) காணப்படும் சிறப்பாக கருதப்படுவது.

02.

20ம் நூற்றாண்டில் பிரசித்திப் பெற்ற இலங்கைக் கலைஞர்களில் 1904 ஆம் ஆண்டு காலி மாவட்டத்தில் பிறந்த **"G.S** பெர்னாந்து" நீர் வர்ண சித்திரத்திரக் கரையில் நுட்பத்திறனை வெளிக்காட்டிய ஓவியக் கலைஞர் ஆவார்.

(அ). **G.S** பெர்னாந்து வரைந்த நீர் வர்ண ஓவியங்களைக் குறிப்பிடுக.

(ஆ). இவ் ஓவியரின் ஓவியங்களின் நீர் வர்ண கலை பற்றிய செல்வாக்கினைக் குறிப்பிடுக.

(இ). கடாலாதெனிய, ஓட்டுச்சூளை ஓவியங்களின் சிறப்பம்சங்களை கலை மதிப்பீடு செய்க.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம். – கண்டி

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை -2020

தரம் :- 13 (2020) சித்திரக் கலை - I அலகுப் பரீட்சை -03 ஒரு மணித்தியாலம்

வினாத்தாள் இல :- 03

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.

1 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடை எழுதுங்கள்.

01. இந்தியக் கலை வரலாற்றில் தனிக்கருங்கல்லைப் பொழிந்து அமைக்கப்பட்ட ஆலயங்கள் என அழைக்கப்படும் சிறப்புக்கட்டிடக் கலை எது?

02. இவ்வாலயத் தொகுதி பல்லவக் கட்டடகலையின் எந்தக் காலத்தினுடைய தனிச்சிறப்புக்களை வெளிப்படுத்துகின்றது.

03. பல்லவக் காலத்திற்குறிய இந்த இரதங்கள் கொண்ட ஆலயங்கள் எந்தக் காலப்பகுதிக் குறியதாகக் கருதப்படுகின்றது.

04. கடற்கரைக் கோயில் எங்கு அமையப் பெற்றுள்ளது?

05. கடற்கரைக் கோயிலின் சிறப்பாகக் கருதக் கூடிய அம்சம் யாது?

06. பல்லவக் கலை மரபிற்குறிய கட்டிடக்கலைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட ஊடகம் யாது?

07. பல்லவ கலை செல்வாக்கில் வெளிப்டுத்தப்படுகின்ற நம்பிக்கையின் சிறப்பு யாது?

08. ஆகாய கங்கையின் இறக்கம் எவ்வகைச் செதுக்கல்களில் உள்ளடக்கப்படுகின்றது?

09. இங்குக் காணப்படும் செதுக்கல்களில் வெளிப்படுத்தப்படும் வரலாற்று நிகழ்வு யாது?

10. மேற்கூறப்பட்ட செதுக்கள்கள் எத்தனைப் பிரிவுகளாகப் பாகுப்படுத்தி செதுக்கப்பட்டுள்ளன?

11. “ஆகாய கங்கையின் இறக்கம்” என இச்செதுக்கள் பெயர் பெற்றமைக்கான காரணம் யாது?

12. இநத செதுக்கல்கள் மூலம் வெளிக்காட்டப்படும் கலைப்பாணி யாது?

13. இந்த செதுக்கல்களில் உள்ள உருவங்களில் காணக்கூடிய சிறப்புத் தன்மை என்ன?

14. “திரௌபதை இரதம்” செதுக்கப்பட்டதன் கோட்பாடு யாது?

15. வாகல் கடம் எனும் கட்டிடக்கலை நிர்மாணிப்பின் பிரதான கட்டிடத்தொகுதி எது?

16. வாகல்கடம் எனும் கட்டிடத்தொகுதிக்கு வழங்கப்படும் வேறுப்பெயர்கள் எவை?

17. மிகவும் பழைமை வாய்ந்ததும் பெறுமதி மிக்க செதுக்கு வேலைப்பாடுகளும் கொண்ட வாகல் கடம் எது?

18. வாகல்கடத்தைக் கொண்டு இலங்கையில் காணப்படும் தாதுகோபங்கள் எவை?

19. சந்திரவட்டக் கற்களுக்கு வழங்கப்படும் வேறுப்பெயர்கள் எவை?


20. மிகப் பழமைவாய்ந்த சந்திர வட்டக்கல்லின் வடிவம் யாது?

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை -2020

தரம் :- 13 (2020) சித்திரக் கலை - II அலகுப் பரீட்சை - 03

21 தொடக்கம் 30 வரையிலான வினாக்களுக்கு கீழ் காணும் ஒளிப்படங்களைக் கையாளுங்கள்.



21. தூபிகளுடன் தொடர்புடைய கட்டிடக்கலை அம்சங்கள் இங்குக் காட்டப்பட்டுள்ளன. அவற்றுக்கான பெயர்களை சரியாக எழுதிக் காட்டுக

A :-..... B :-..... C :-..... D :-.....
E :-..... F :-..... G :-..... H :-.....
I :-.....

22. தூபிகளுக்கு அழகு, பாதுகாப்பு என்பனக்கருதிக் கட்டப்பட்ட கட்டடக்கலை எது?

23. வாகல் கடத்தில் காணப்படும் விலங்குருக்களைக் குறிக்கும் திசைகளும் விலங்குகளும் எவை?

24. வாகல்கடத்தின் கிடைப்பக்கத்தில் காணப்படும் மணியுருக்கட்டில் (பொரதம்) பொறிக்கப்பட்டுள்ள உருக்கள் எவை?

25. செட்டைக்கல் கைப்பிடி வேறு எப் பெயர்களால் அழைக்கப்படும்?

26. நாக வடிவம் கொண்ட காவற்சிலைகள் காணப்டும் இடங்கள் எவை?

27. கைப்பிடிகள் நிர்மாணிக்ப்பட்டதன் நோக்கமாக கருதப்படும் விடயம் யாது?

28. சிறப்பு வாய்ந்த பொலநறுவைக் காலத்து கைப்பிடிகள் எவை?

29. சௌபாக்கியம், நிறைவு, அதிஷ்டம் என்பவற்றின் அடையாளமாகக் கருதக் கூடிய உருவப்படம் எது?

30. சந்திரவட்டக் கற்களை காலவரிசை முறைப்படி காட்டக் கூடிய எழுத்துக்களையும், அவற்றின் பெயரையும் குறிப்பிடுக.

02.

“கட்டக் கலை என்பது இலங்கையின் மகத்தான வரலாற்றுப் பொக்கிஷிசமாகவும் வாழ்வியல் ஆதாரமாகவும் கருத வேண்டியஅ ம்சமாகும்” மன்னர்கள் பௌத்த கலையின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கம் அலப்பறிய பங்காற்றியுள்ளார்கள் என்பது மறுக்கமடியாத உண்மையாகும்.

01. இலங்கையில் காணப்படும் தூபிகளுடன் தொடர்புடைய சிறப்புவாய்ந்த “வட்டதாகே” அமைப்புக்கள் எவை?

02. வட்டதாகே கட்டிடக் கலை நிர்மாணிப்பின் இயல்புகளை விபரிக்குக.

03. “வட்டதாகேயில் பொலநறுவை வட்டதாகே வரலாற்று சிறப்பு மிக்கது” இக்கூற்றினை ஆராய்க.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம். – கண்டி

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை -2020

தரம் :- 13 (2020) சித்திரக் கலை - I வினாத்தாள் இல :- 05 ஒரு மணித்தியாலம்

வினாத்தாள் இல :- 05

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.

1 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடை எழுதுங்கள்.

01. அக்கடமிக் யதார்த்த வாதத்தன் குறிக்கோள்கள் எவை?

02. யதார்த்த வாதம் எனும் கோட்பாட்டின் விதி முறை யாது?

03. மனப்பதிவு வாதம் எனும் கோட்பாட்டின் நோக்கம் யாது?

04. கனவடிவ வாதம் என்றால் என்ன? அதன் முன்னோடி கலைஞர்கள் யாவர்?

05. மீயதார்த்த வாதம் என்பது எவ்வாறான சித்திரக் கோட்பாடு?

06. மனோரதிய வாதம் என்பதன் கருத்து யாது?

07. கீழேத்தேய வாதம் எனும் சத்திர கோட்பாட்டு வாதம் வெளிப்படுத்தும் கருத்து யாது?

08. பின்வரும் ஓவியபாணிக்குறிய ஆங்கிலப் பதங்களைத் தருக?

(அ). அக்கடமிக் வாதம். (ஆ). யதார்த்த வாதம் (இ). மனப்பதிவு வாதம்

(ஈ). கனவடிவ வாதம் (உ). மீயதார்த்த வாதம் (ஊ). மனோரதிய வாதம்

(எ). கீழேத்தேய வாதம்.

09. மீயதார்த்த வாத கலையின் முக்கிய பண்பு யாது?

10. மீயதார்த்த வாதத்தின்மிக முக்கிய ஓவியர் யார்?

11. டாலியின் ஓவிய பின்னனி மனோத்தத்துவ வியலாளர் யார்?

12. டாலியின் ஓவியங்களின் முக்கிய பண்புகள் எவை?

13. ப்ரீடா காலோவின் சித்திர கோட்பாடு யாது?

14. இவரின் கலை நிர்மாணிப்புகளின் பண்புகளின் செல்வாக்கு யாது?

15. ப்ரீடா காலோவின் மீயதார்த்த வாத சிறப்பு ஆக்கங்கள் எவை?

16. டாலியின் மீயதார்த்தவாத ஆக்கங்கள் எவை?

17. நீடித்த நினைவு ஆக்கத்தின் முக்கிய வெளிப்பாடுகள் 05 தருக.

18. முள் மாலை தரித்த "சுய பிரதிமை ஓவியம்" - இவ்வோவியத்தின் சிறப்புக்கள் எவை?

19. ப்ரீடா இருவரின் என்ற ஓவிய காலம் யாது? அதன் சிறப்புக்கள் எவை?

20. "உறக்கம்" என்ற ஓவிய காலம் யாது? அதன் சிறப்புக்கள் எவை?